பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 701 **நாள்: 20.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் தூய்மைப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (20.11.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட காந்தி இர்வின் சாலையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், மரக்கன்றுகள் நடும் பணி, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தூய்மைப் பணி, எல்.ஜி. சாலையில் உள்ள இலவச ஒப்பனை அறை, வார்டு-63க்குட்பட்ட ஆதித்தனார் சாலையில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணி, சூரம்மாள் தெருவில், வீடுகள் தோறும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து வழங்கும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க நகர் மண்டலம், வார்டு-67க்குட்பட்ட தாங்கல் மயான பூமி, பல்லவன் சாலையில் உள்ள இலவச ஒப்பனை அறை உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பனை அறையினை சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-177க்குட்பட்ட கோரா ஃபுட் கோட், ஓட்டல் ஃபோர் பாண்ட்ஸ் ஆகிய உணவகத்தில் சேகரிக்கப்படும் பெருமளவுக் குப்பைக் கழிவுகளை (BWG) முறையாக தரம் பிரித்து வழங்குவது குறித்தும், வார்டு-178க்குட்பட்ட சி.எஸ்.ஐ.ஆர் சாலையில் உள்ள இலவச ஒப்பனை அறை, அப்பகுதியில் உள்ள திறந்த வெளி நிலம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பெருமளவு குப்பைக் கழிவு உற்பத்தியாளர்கள் குப்பைக் கழிவுகளை தரம் பிரித்து வழங்குகிறார்களா என்று அலுவலர்கள் ஆய்வுகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி